மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் காணப்படும் உறவுகள் குறித்த பதிவுகள்

# Statements on relationships found in the Tamil Traditional Poetry Book Vinnamudham

கீர்த்திகா ரவிச்சந்திரன்/ Kirthiga Ravichandran[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: rmkirthiga@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

விண்ணமுதம்' எனும் மரபு கவிதைத் தொகுப்பில் காணப்படும் உறவுகள் குறித்த பதிவுகளே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும். இந்த 'விண்ணமுதம்' எனும் மரபு கவிதைத் தொகுப்பில் மொத்தம் 101 தமிழ்க் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இதில் உறவுகள் சார்ந்த பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. இந்த ஆய்வு, பண்புசார் அணுகுமுறையிலும் நூலாய்வு எனும் அணுகுமுறையிலும் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்கு 'விண்ணமுதம்' எனும் மரபு கவிதைத் தொகுப்பே முதல் நிலை தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கவிதைகளில் உறவுகள் எனும் கருப்பொருள் கவிஞரால் பல இடங்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவிதைகளில் உள்ள உறவின் சிறப்பை இந்த ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

**கருச்சொற்கள்:** விண்ணமுதம், கவிதைத் தொகுப்பு, உறவுகள்

**Abstract**

The main objective of this study is the messages about relationships found in the traditional poetry collection 'Vinnamudham'. A total of 101 Tamil poems are included in this collection of traditional poetry called 'Vinnamudhham'. It also contains poems about relationships. This study has been dealt with in qualitative approach as well as literature review approach. For this study, the traditional poetry collection 'Vinnamudham' has been used as primary data. In these poems the theme of relationships has been brought out by the poet at many places. Through this study we can know the quality of relationship in each poem.

**Keywords:** Statements on relationships, found, traditional poetry collection Vinnamudham

**முன்னுரை**

விண்ணமுதம் எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பு, கவிஞர் விண்ணமுதன் ஆத்மலிங்கம் அவர்களால் எழுதப்பட்டதாகும். எட்டுத் தலைப்புகளைக் கொண்டுள்ள இக்கவிதைத் தொகுப்பில் மொத்தம் 101 கவிதைகள் உள்ளன. அவ்வகையில், இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் உறவுகள் குறித்த பதிவுகளை ஆராய்ந்து இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. உறவுகள் இன்றி நாம் இவ்வுலகில் வாழ இயலாது. அவ்வகையில் தம் வாழ்வில் கவிஞர் சந்தித்த உறவுகளின் சிறப்பை விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு உணர்த்தி நிற்கிறது.

**தாய்**

இக்கவிதைத் தொகுப்பில் தாய் எனும் அரிய உறவு குறித்த சில பதிவுகள் காணப்படுகின்றன. இத்தொகுப்பில் அம்மாவைப் பற்றி இரண்டு கவிதைகளைக் கவிஞர் படைத்துள்ளார். அம்மாவின் அன்பையும் அவரின் வளர்ப்பையும் மிக உயர்த்திப் போற்றி கவிஞர் 'அம்மா' எனும் கவிதையை இயற்றியுள்ளார். சான்றாக,

'அம்மா உன்றன் அன்பினிலே

அணைத்தாய் என்னை உன்னுள்ளே!

இம்மை முழுதும் உமைப்போற்றி

இருப்பேன் உமக்குக் கண்ணாக!' (பக்கம் 38)

அதுமட்டுமல்லாமல், 'உயிரான என்தாயே!' எனும் கவிதை மூலம் தடம் மாறிச் செல்லும் போது, தன்னை நல்வழிப்படுத்திய தாயின் அன்பையும் நன்னெறியையும் கவிஞர் போற்றியுள்ளார். மேலும், ஊரார் வாழ்த்தும் வகையில் கலையுணர்வையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டி வளர்த்த தனது தாயைக் கவிஞர் இக்கவிதையில் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக,

'கலைப்பார்வை கொண்டேநீ

கலையுணர்வில் காணவைத்தாய்!

உலகத்தார் எனைப்போற்ற

உரமிட்டு நீவிதைத்தாய்! (பக்கம் 39)

ஆகவே, நற்பண்பு நிறைந்தவர் என உலகத்தார் பாராட்டும் வகையில் நாம் நடந்து கொள்வதே நம்மை வளர்த்த தாய்க்கு நாம் செய்யும் சிறப்பு என்பதை இக்கவிதை வரிகள் வழி உணரலாம். இச்செய்தியை அன்றே வள்ளுவர்,

‘ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்’

என்று இருவரியில் இயற்றியுள்ளார்.

**தந்தை**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் தந்தை எனும் உறவு பற்றிய சில கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகளில் தந்தையின் குணம், அன்பு, கடமை போன்றவைக் குறிப்பிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வாழ்க்கையில் துவண்டு போகும் வேளையில் ஊக்கம் ஊட்டும் தந்தையின் அறிவுரையும் வாழ்வில் முன்னேற ஊன்றுகோலாக இருக்கும் தந்தையின் வழிகாட்டலையும் கவிஞர் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.

'தனிமையிலே நான்வாடும் தருணத்தில் எனையழைத்தே

இனியசொற்கள் பலசொல்லி எண்ணத்தில் புகுத்திடுவீர்!' - தந்தை(பக்கம் 40)

வாழ்க்கையில் தந்தையின் அறிவுரையும் வழிகாட்டலும் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணரும் அதே தருணத்தில் ஒரு தந்தை இப்படிதான் இருக்க வேண்டும் என்று கூறிய திருவள்ளுவரின் இரு வரி வெண்பாவை நாம் நினைவுகொள்வோம்.

'தந்தை மகற்காற்று நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்' (குறள் 67)

மேலும், 'தந்தையைப் போற்றிடுவோம்!' எனும் கவிதையிலும் தந்தை எனும் உறவு குறித்த பதிவுகளைக் காண முடியும்.

'முரட்டுக் குணத்தை முகத்தில் தேக்கித்

திருவன்பை உள்ளத்தில் தேனாய்ச் சேர்க்கும்

பரம்பொருளின் மாற்றுருவாய்ப் பாரில் உதித்துத்

திருவருள் தந்தே தினம்தேய்வோர் தந்தையரே!' (பக்கம் 41)

இக்கவிதையின் வழி, கண்டிப்பான குணத்திற்குப் பின் மறைந்திருக்கும் தந்தையின் பாசத்தையும் அவரின் தியாகத்தையும் உணர முடியும்.

அதோடு, சிப்பிக்குள் மறைந்திருக்கும் முத்துப் போல தந்தையின் கோபத்திற்குப் பின்னும் தாயின் அன்பு உண்டு என்பதையும் கவிஞர் பதிவு செய்துள்ளார். சான்றாக,

'செந்தீ யைப்போல் கடுஞ்சினத்தைச்

சேயென் மேல்நீர் கொண்டாலும்

தந்தே மகிழ்வீர் பேரன்பைத்

தக்க படியே தனையனுக்கு!' - மீசை வைத்த அன்னையிவர்! (பக்கம் 42)

**அம்மாச்சி**

மேலும், இக்கவிதைத் தொகுப்பில் கவிஞர், அம்மாச்சி பற்றியும் பதிவு செய்துள்ளார். 'அம்மா + ஆட்சி' என்பதே அம்மாச்சி ஆகும். தாயைப் பெற்று எடுத்த தாய் என்று பொருள்படும்.

அதாவது, பாட்டி என்றாகும். நம்மில் பெரும்பாலானோர் பாட்டி என்றாலும், ஒரு சிலர் 'அம்மாச்சி' என்றும் 'அம்மாயி' என்றும் அழைப்பது உண்டு. இவை யாவும் தாயை ஈன்றவளைக் குறிப்பதாகும். அதே வேளையில், 'அப்பாயி', 'அப்பாச்சி' என்பது தந்தையின் தாய் எனப் பொருள்படும். அம்மாச்சி என்பவர் குடும்பத்தையும் தலைமுறையும் காத்திடும் மற்றொரு தாய் என கவிஞர் 'அம்மாச்சி' எனும் கவிதை வழி குறிப்பிடுகிறார். சான்றாக,

'தன்னியல்பு கொண்டுலவித்

தலைமுறையைக் காத்திடுவீர்!' - (பக்கம் 38)

**நட்பு**

அதனைத் தொடர்ந்து, விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் நட்புப் பற்றிய 2 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. வாழ்க்கையில் நட்பின் அவசியத்தை முன்னிறுத்தி இக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, வாழ்வில் துன்பமான தருணங்கள் வரும்போது உடன் இருந்த நண்பனே நட்பின் அடையாளம் என்று கவிஞர் மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

'கவலையில்நான் வாடிடவே

கருத்தாகக் கவனித்தாய்!' - குவலயம் போற்றும் மனம் (பக்கம் 41)

உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவதுதான் நட்பு என்பதைத் திருவள்ளுவரின் 788-வது குறளின் காணலாம்.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு'.

வாழ்வில் நட்பின் அடையாளத்தை வெளிபடுத்தும் அதே வேளையில் கவிஞர், தேன் தமிழ்த்தளிர்கள் எனும் தம் கல்லூரி நட்பையும் போற்றியுள்ளார். சான்றாக,

'தேன்தமிழ்த் தளிர்களாய்ச் சேர்ந்த எம்நட்பைக்

கோன்தமிழ்ப் பெயர்கொண் டழைத்தாள் அம்மையே!'

தேன்தமிழ்த்தளிர்கள் (பக்கம் 43)

**தமிழ்த்தாய்**

தாய் மொழியான தமிழைத் தாயாக உருவகம் கொண்டும் கவிஞர் சில கவிதைகளைப் படைத்துள்ளார். தமிழைத் தாய்க்கு நிகராக ஒப்பிட்டுள்ளார் கவிஞர். சான்றாக,

'தேரார் போற்றத் தெளிவாய்ச் சொல்லிடு!

தாயும் தமிழும் தனித்தனி யல்ல!' - தாயின் மொழி (பக்கம் 7)

தமிழைத் தாயாகக் கருதியதோடு மட்டுமில்லாமல் தமிழின் பெருமையான கவியைத் தமிழ்த்தாயின் மகளாக உருவகப்படுத்தி, கவிதை படைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

'தமிழ்த்தாய் ஈன்றிடப் பிறந்தாள் - நற்

றமிழ்ப்பா மகளென உதித்தாள்!'

இவ்வரிகள் 'கவிமகள்' (பக்கம் 3)

எனும் கவிதையில் இடம்பெற்றுள்ளன.

**இயற்கைத் தாய்**

மண்ணிலும் விண்ணிலும் வாழும் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்கும் இயற்கை பற்றியும் கவிஞர் தன் கவிதைத் தொகுப்பில் பதிவு செய்துள்ளார். சான்றாக,

'இயற்கைத் தாயும் குறிஞ்சிலே

ஈன்றாள் ஆறென் றருமகளை!'

(இயற்கை ஈன்ற அருமகள்!, பக்கம் 31)

எனும் வரிகளில், கவிஞர் இயற்கையைத் தாயாகவும் அருவியை மகளாகவும் உருவகப்படுத்தியுள்ளார்.

**நிறைவுரை**

விண்ணமுதம் எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பை ஆராய்கையில், கவிஞர் உறவுகளுக்குக் கொடுத்த முன்னுரிமையும் அவசியத்தையும் உணர முடிந்தது. அதோடு, உறவுகள் என்பது இரத்தப் பந்தம் கொண்டவையாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதைக் கவிஞர் மிக தெளிவாகத் தனது கவிதைகள் வழி தெரிவித்துள்ளார். மேலும், வாழ்க்கைக்கு முக்கியமானவற்றை நாம் நமது உறவுகளாகக் கருத முடியும் என்பதைக் கவிஞர், இயற்கையும் தமிழையும் தாயாக ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

இராமகிருஷ்ணன். (2014). திருக்குறள் உரைநயம். குமரன் பதிப்பகம்.
சரண் சுக்லாம், ஆ. (2021). விண்ணமுதம். சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்.